செய்தி வெளியீடு எண்: 351 நாள்: 24.4.2010

# முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

2004–2005ஆம் ஆண்டில் 'மண்ணின் மைந்தன்' படத்திற்கு நான் திரைக்கதை வசனம் எழுதியதன் மூலம் கிடைத்த ஊதியம் 11 இலட்சம் ரூபாய் – 'கண்ணம்மா' படத்தின் மூலம் கிடைத்த ஊதியம் 10 இலட்சம் ரூபாய் ஆக 21 இலட்சம் ரூபாயை சுனாமி நிவாரணத்திற்காக அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று வழங்கும்படிச் செய்தேன்.

அது போலவே 9–7–2008 அன்று 'உளியின் ஓசை' படத்தின் மூலம் கிடைத்த ஊதியம் ரூ.25 இலட்சத்தில் வருமான வரி போக மீதி 18 இலட்சம் ரூபாயை திரைத்துறையின் பல்வேறு தளங்களிலும் பணியாற்றும் மூத்த கலைஞர்களுக்கு நானே நேரடியாக வழங்கினேன்.

அந்த வரிசையில் தற்போது தயாரிக்கப்படும் "பெண் சிங்கம்" திரைப்படத்திற்காக எனக்குக் கிடைத்த 50 இலட்சம் ரூபாயை தமிழக அரசின் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலே சேர்ப்பதற்காக 14–9–2009 அன்று ஒப்படைத்து – தமிழகத்திலே உள்ள அருந்ததிய சமுதாய மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து படிக்க அரசு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவிட வேண்டுமென்று என்னிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, முதல் அமைச்சர் நிவாரண நிதியிலே நான் ஒப்படைத்த தொகை ஐம்பது இலட்சம் ரூபாயை தூய்மைப் பணி புரிவோர் (அருந்ததியர்) நல வாரியத்தின் மூலமாக அருந்ததிய மாணவர்களின் உயர்கல்விக்காக வழங்கப்பட்டது.

அது போலவே தற்போது தயாரிக்கப்படும் “இளைஞன்” திரைப்படத்திற்காக இன்று (24–4–2010) எனக்கு அளிக்கப்பட்ட 45 இலட்சம் ரூபாயை தமிழக அரசின் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலே சேர்ப்பதற்காக ஒப்படைக்கின்றேன். இந்தத் தொகையினை – தமிழகத்திலே உள்ள மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்திலே ஒப்படைத்து அதன் மூலமாக இந்தத் தொகை மாற்றுத் திறனாளிகளின் நலன்களுக்காகச் செலவிடப்படும் என்பதையும் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.

***